**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் .I, தஞ்சாவூர்.**

**முன்னிலை: செல்வி. S. T. கனிமொழி, L.L.M.,**

**நீதித்துறை நடுவர் எண் .I, தஞ்சாவூர்.**

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 24-ம் நாள் செவ்வாய் கிழமை

2057 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 10 ம் நாள்

**சிசி எண்.263/2025**

CNR NO.TNTJ05-002052-2025

அரசுக்காக, காவல் ஆய்வாளர்,

நகர கிழக்கு காவல்நிலையம், தஞ்சாவூர்.

குற்ற எண்.488/2015. .....குற்றமுறையிடுபவர்

//எதிர்//

4) விக்னேஷ், வயது 30/2026, த/பெ. சின்னதுரை,

குளத்துமேட்டு தெரு, கரந்தை, தஞ்சாவூர்.

8) முகமது ஆரிப், வயது 33/2026, த/பெ. முகமது காசிம்,

சக்கரைகுளம், சின்னஅரிசிக்காரத்தெரு, மானம்புச்சாவடி, தஞ்சாவூர்.

(இவ்வழக்கின் 8 வது எதிரி கடந்த 24.03.2026 அன்று சிசி எண்.210/2026 என தனியாக பிரித்தெடுக்கப்பட்டுள்ளார்) ....எதிரிகள்

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 20.05.2025 அன்று சிசி.எண். 18/2017 வழக்கிலிருந்து சிசி.எண். 263/2025 என தனியாக பிரித்தெடுக்கப்பட்டு, 24.03.2026 அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு கொண்டுவரப்பட்டதில் குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. அ. ராஜேஷ்கண்ணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...,

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI Date: 2026.03.24 15:26:39 +0000

## **தீர்ப்புரை**

**I) குற்ற அறிக்கையின் சுருக்கம்-**

கடந்த 01.12.2015 ம் தேதி 17.00 மணியளவில் தஞ்சாவூர் கீழவாசல் ஆட்டுமந்தை விசிரிக்காரத்தெரு ரோடு முக்கத்தில் இவ்வழக்கின் எதிரிகள் தங்களது நண்பன் கீழவாசல் தட்டான் தெருவைச் சேர்ந்த வெங்கடேஷ் என்பவரை அடித்து கொலை செய்தவர்களை நாம் பழிவாங்க வேண்டும் என்றும் அடித்து கொலை செய்தவங்க உறவினர்களை பயமுறுத்த வேண்டுமென்று பொதுமக்களுக்கு எதிராக செயல்படவேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தவர்களிடம் போலீஸ் சட்டம் 30 (2) அமுலில் உள்ள விபரம் கூறியும் அந்த இடத்தை விட்டு போகச்சொல்லியும் கலைந்து செல்லாமல் குற்றம் செய்யும் எண்ணத்துடன் செயல்பட்டு குற்றம் புரிந்துள்ளதாக தெரிவித்து, தஞ்சாவூர் நகர கிழக்கு காவல்நிலைய காவல் ஆய்வாளர் எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள். 151Cr.Pc r/w. 7(1) (a) CLA Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

II) இந்நிலையில் வழக்கு விசாரணையின் போது இவ்வழக்கின் 8 வது எதிரி கடந்த 24.03.2026 அன்று சிசி எண்.210/2026 என தனியாக பிரித்தெடுக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் வழக்கின் 4 வது எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குவிமுச பிரிவு 207-ன் கீழ் ஆவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டு, பின்னர் இவ்வழக்கின் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், பார்வையிட்டும், எதிரி மீது சட்டப்பிரிவுகள். 151Cr.Pc r/w. 7(1) (a) CLA Act ன் படியான குற்றச்சாட்டு வனையப்பட்டு, குற்றச்சாட்டை விளக்கிக் கூறி வினவியபோது, 4 வது எதிரி மேற்படி குற்றங்களை மறுத்து குற்றவாளி இல்லை என்றார். எனவே அரசு தரப்பு

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.03.24 15:26:47 +0000

சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

III) இவ்வழக்கில் அரசு தரப்பில் அசா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

IV) **இவ்வழக்கில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம் யாதெனில்,**

1. அரசு தரப்பு வழகின் படி கடந்த 01.12.2015 ம் தேதி 17.00 மணியளவில் தஞ்சாவூர் கீழவாசல் ஆட்டுமந்தை விசிரிக்காரத்தெரு ரோடு முக்கத்தில் இவ்வழக்கின் எதிரிகள் தங்களது நண்பன் கீழவாசல் தட்டான் தெருவைச் சேர்ந்த வெங்கடேஷ் என்பவரை அடித்து கொலை செய்தவர்களை நாம் பழிவாங்க வேண்டும் என்றும் அடித்து கொலை செய்தவங்க உறவினர்களை பயமுறுத்த வேண்டுமென்று பொதுமக்களுக்கு எதிராக செயல்படவேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தவர்களிடம் போலீஸ் சட்டம் 30 (2) அமுலில் உள்ள விபரம் கூறியும் அந்த இடத்தை விட்டு போகச்சொல்லியும் கலைந்து செல்லாமல் குற்றம் செய்யும் எண்ணத்துடன் செயல்பட்டு குற்றம் புரிந்துள்ளதாக தெரிவித்து, தஞ்சாவூர் நகர கிழக்கு காவல்நிலைய காவல் ஆய்வாளரால் எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள். 151Cr.Pc r/w. 7(1) (a) CLA Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

V) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இவ்வழக்கின் 4 வது எதிரியை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து 4 வது எதிரியிடம் குவிமுச.பிரிவு 313(1) (ஆ)ன் படி வினவியபோது போது 4 வது எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் தெரிவித்தார். எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.03.24 15:26:54 +0000

VI) **இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவென்றால் 4 வது எதிரி மீது சட்டப்பிரிவுகள்.** 151 Cr.Pc r/w. 7(1) (a) CLA Act **ன் கீழ் குற்றச்சாட்டுகள் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

1. அரசு தரப்பில் அசா.1 முதல் 3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அரசு தரப்பு வழக்கினை நிரூபித்துவிட்டதாக வாதம் முன்வைக்கப்பட்டது. அதே வேளையில் குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் இந்த வழக்கின் தனிப்பட்ட சாட்சிகள் யாரும் இல்லையென்றும், காவல்துறை அதிகாரிகளே எதிரிக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளனர் என்றும், எனவே தனிப்பட்ட சாட்சிகள் யாரும் அரசு தரப்பிற்கு ஆதரவாக குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது குற்ற கூறுகள் உள்ளவாறு சாட்சியம் அளிக்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்பட்டவரின் தரப்பில் வாதம் முன் வைக்கப்பட்டு, எதிரியை விடுதலை செய்யவேண்டுமென வாதிட்டார்.

2. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்கின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

3. வழக்கின் சம்பவம் குறித்து அசா.1 ஞானவேல் சிறப்பு உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில் "கடந்த 01.12.2015 ம் தேதி ரோந்து செய்து வந்தபோது காவல் ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின் பேரில் எதிரிகளின் நண்பன் வெங்கடேசன் என்பவரை அடித்து கொலை செய்தவர்களை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கீழவாசல் ஆட்டுமந்தை தெரு விசிறிகாரத்தெருவில் இருக்கும் பிரிவு ரோடு அருகே அவர்களுடன் மற்றும் பலர் இருப்பதாக கிடைத்த தகவலின் படி மாலை 16.30 மணிக்கு மேற்படி சம்பவயிடம் சென்று பார்க்க அங்கு எதிரிகளை

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.03.24 15:27:01 +0000

ஆய்வாளர் விசாரணை செய்கையில் அவர்கள் தங்கள் நண்பரான வெங்கடேசன் என்பவரை அடித்து கொலை செய்தவர்களின் உறவினர்களை பயமுறுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் கூடியிருந்தவர்களை போலீஸ் சட்டம் 30(2) அமலில் உள்ளது என்றும், அந்த இடத்தை விட்டு போகுமாறு சொல்லியும் கலைந்து போகாமல், குற்றம் செய்யும் எண்ணத்துடன் இருந்தவர்களை 17.00 மணிக்கு காரணம் கூறி ஆய்வாளர் கைது செய்து, எதிரிகளை 18.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து நிலைய குற்ற எண்.488/2015 சட்டபிரிவுகள்.151 CRPC and 7(1)(a) CLA Act ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும்" சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில் அசா.1 ன் குறுக்கு விசாரணையில் "இவ்வழக்கில் 30(2) அமலில் உள்ளது என்பதை ஒலிபெருக்கி மூலம் தகவல் கொடுக்கவில்லை என்றும், விசிறிகார தெரு வீடுகள் நிறைந்த பகுதி என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். அசா.1 ன் சாட்சியத்திலிருந்து சம்பவ இடமான தஞ்சாவூர் விசிறிக்காரத்தெரு மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதி என்பதும், அங்கு பொதுமாக்கள் இருந்துள்ளனர் என்பதும், அவர்களில் யாரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை எனவும் தெரிகிறது. மேலும் காவல் தடை சட்டம் 30 (2) உள்ளது என்பதை ஒலிபெருக்கி மூலம் தகவல் கொடுக்கவில்லை எனவும் புலனாகிறது.

4. அடுத்தபடியாக அசா.2 கஸ்துாரியப்பா சிறப்பு உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில் "கடந்த 01.12.2015 ம் தேதி காவல் ஆய்வாளருடன் ரோந்து பணியில் இருந்தபோது ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி எதிரிகள் கீழவாசல் ஆட்டுமந்தை தெரு, விசிறிகாரதெரு பிரிவு சாலை அருகே இருப்பதாக மாலை 16.30 மணிக்கு சென்று பார்த்தபோது ஆய்வாளர் விசாரிக்க எதிரிகளது நண்பன்

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.03.24 15:27:08 +0000

வெங்கடேஷ் என்பவரை அடித்து கொலை செய்துவிட்டதாகவும், கொலை செய்தவர்களின் உறவினர்களை பயமுறுத்தும் நோக்கத்துடன் இருந்தவர்களை காவல் சட்டம் 30(2) அமலில் இருப்பதாக கூறியும், கலைந்து செல்லும் படி எச்சரித்தும், குற்ற செய்யும் நோக்கத்துடன் இருந்தவர்களை 17.00 மணிக்கு காரணம் கூறி ஆய்வாளர் கைது செய்ய தாங்கள் உதவியாக இருந்ததாகவும், 18.00 மணிக்கு எதிரிகளுடன் நிலையம் வந்து எதிரிகள் மீது நிலைய குற்ற எண்.488/2015 சட்டபிரிவுகள்.151crpc, 7(1)(a) CLA Act ன் படி வழக்கு பதிவு செய்து, எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும்" சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில் அசா.2 ன் குறுக்கு விசாரணையில் "இவ்வழக்கில் 30(2) அமலில் உள்ளது என்பதை ஒலிபெருக்கி மூலம் தகவல் கொடுக்கவில்லை என்றும், விசிறிகார தெரு வீடுகள் நிறைந்த பகுதி என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். அசா.1 ன் சாட்சியத்திலிருந்து சம்பவ இடமான தஞ்சாவூர் விசிறிக்காரத்தெரு மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதி என்பதும், அங்கு பொதுமாக்கள் இருந்துள்ளனர் என்பதும், அவர்களில் யாரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை எனவும் தெரிகிறது. மேலும் காவல் தடை சட்டம் 30 (2) உள்ளது என்பதை ஒலிபெருக்கி மூலம் தகவல் கொடுக்கவில்லை எனத்தெரிகிறது.

5. மேலும் அசா.3 ஜான்கென்னடி சிறப்பு உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில் "கடந்த 01.12.2015 ம் தேதி காவல் ஆய்வாளருடன் தானும், உதவி ஆய்வாளர் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் ரோந்து பணியில் இருந்தபோது ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி கீழவாசல் ஆட்டுமந்தை தெரு, விசிறிகாரதெரு பிரிவு சாலை மாலை 16.30 மணிக்கு இடம் சென்று பார்த்தபோது ஆய்வாளர் விசாரிக்க

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.03.24 15:27:13 +0000

எதிரிகளது நண்பன் வெங்கடேஷ் என்பவரை அடித்து கொலை செய்துவிட்டதாகவும், கொலை செய்தவர்களின் உறவினர்களை பயமுறுத்தும் நோக்கத்துடன் இருந்தவர்களை காவல் சட்டம் 30(2) அமலில் இருப்பதாக கூறியும், கலைந்து செல்லும் படி எச்சரித்தும், குற்ற செய்யும் நோக்கத்துடன் இருந்தவர்களை 17.00 மணிக்கு காரணம் கூறி ஆய்வாளர் கைது செய்ய தாங்கள் உதவியாக இருந்ததாகவும், 18.00 மணிக்கு எதிரிகளுடன் நிலையம் வந்து எதிரிகள் மீது நிலைய குற்ற எண்.488/2015 சட்டபிரிவுகள்.151crpc,7(1)(a) CLA Act ன் படி வழக்கு பதிவு செய்து, எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும்" சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில் அசா.3 ன் குறுக்கு விசாரணையில் "இவ்வழக்கில் 30(2) அமலில் உள்ளது என்பதை ஒலிபெருக்கி மூலம் தகவல் கொடுக்கவில்லை என்றும், விசிறிகார தெரு வீடுகள் நிறைந்த பகுதி என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். அசா.1 ன் சாட்சியத்திலிருந்து சம்பவ இடமான தஞ்சாவூர் விசிறிக்காரத்தெரு மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதி என்பதும், அங்கு பொதுமாக்கள் இருந்துள்ளனர் என்பதும், அவர்களில் யாரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை எனவும் தெரிகிறது. மேலும் காவல் தடை சட்டம் 30 (2) உள்ளது என்பதை ஒலிபெருக்கி மூலம் தகவல் கொடுக்கவில்லை என அறியமுடிகிறது.

6. மேலும் எதிரி தரப்பு வழக்கறிஞர், 1 முதல் 3 காவல்துறை அதிகாரிகள் சாட்சியங்கள் என்றும், தனிப்பட்ட சாட்சிகள் யாரும் இல்லை என்றும், அவர்களின் சாட்சியம் நிராகரிக்கப்பட வேண்டும் என்றும் வாதிட்டார். அவரது வாதம் ஏற்றுக்கொள்ளும்படியாக இருப்பதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இதுபோன்ற வழக்குகளில் தனிப்பட்ட சாட்சிகளின் பங்கு மிகவும் முக்கியமானதாக

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.03.24 15:27:18 +0000

இந்நீதிமன்றம் கருதுகிறது

7. மேலும் இவ்வழக்கில் விசாரணை அதிகாரியை விசாரிக்காதது அரசுத் தரப்பு வழக்கிற்கு பாதகமாகிவிடாது என்று மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. நம்பகமான சாட்சியங்களால் வழக்கு நிரூபிக்கப்பட்டு, குற்றம்சாட்டப்பட்டவருக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாத பட்சத்தில், விசாரணை அதிகாரியின் சாட்சியம் இல்லாமல் ஒரு தண்டனையை நிலைநிறுத்த முடியாது என்பது சட்ட விதி அல்ல. அரசுத் தரப்பு வழக்கு மற்றபடி உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில், விசாரணை அதிகாரியை விசாரிக்காதது ஒவ்வொரு வழக்கிலும் ஒரு பெரும் குறைபாடாகாது. நேரில் கண்ட சாட்சிகள் அல்லது மருத்துவச் சான்றுகள் சம்பவத்தையும் அது நிகழ்ந்த இடத்தையும் நம்பகத்தன்மையுடன் நிரூபித்தால், விசாரணை அதிகாரியின் சாட்சியம் இல்லாதது தண்டனையைச் செல்லாததாக்காது. தற்போதைய வழக்கின் உண்மைகளின் அடிப்படையில், குறிப்பாக அரசுத் தரப்பு வழக்கில் உள்ள வெளிப்படையான உண்மைகள் மற்றும் 1 முதல் 3 சாட்சிகளின் சாட்சியங்கள் முழுமையாக நம்பகமானதாக உள்ளது என்று நீதிமன்றம் கருதுகிறது.

8. மேலும் மாண்புமிகு உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளின்படி, புலனாய்வு அதிகாரி (IO) இல்லாதது என்பது அரசுத் தரப்பு வழக்கிற்கு இயல்பாகவே பாதகமானதல்ல. சாட்சியமளிப்பதற்கு அது விரும்பத்தக்கதாக இருந்தாலும், முக்கிய முரண்பாடுகளைக் கவனிக்கத் தவறுதல், விளக்கப்படாத சாட்சியக் கையாளுதல் அல்லது ஒரு நியாயமற்ற விசாரணை போன்ற உண்மையான பாதிப்பை இந்தத் தவறு ஏற்படுத்தியது என்று எதிர் தரப்பு நிரூபித்தால் மட்டுமே அது பாதகமானதாகிறது.

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.03.24 15:27:24 +0000

9. மேலும் விசாரணை அதிகாரியை விசாரிக்காதது குற்றம்சாட்டப்பட்டவரை விடுவிக்க வழிவகுக்கும் என்ற அரசு தரப்பு வழக்கறிஞரின் கருத்தையும் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. இருப்பினும், 1 முதல் 3 சாட்சியங்கள் அரசு தரப்புக்கு ஆதரவாகப் பதிவு செய்யப்பட்டன. சாட்சிகளின் சாட்சியத்தின் மீது நீதிமன்றத்திற்கு எந்த சந்தேகமும் இல்லை. மேலும் விசாரணை அதிகாரியை விசாரிக்காதது, அரசுத் தரப்பு வழக்கிற்கு தானாகவே பாதகமாகிவிடாது என்று மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. நம்பகமான சாட்சியங்களால் வழக்கு நிரூபிக்கப்பட்டு, குற்றம்சாட்டப்பட்டவருக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாத பட்சத்தில், விசாரணை அதிகாரியின் சாட்சியம் இல்லாமல் ஒரு தண்டனையை நிலைநிறுத்த முடியாது என்பது சட்ட விதி அல்ல என்றும் நீதிமன்றம் கருதுகிறது.

10. மேலும் இவ்வழக்கில் காவல்துறை அதிகாரிகளே சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளதும், தனிப்பட்ட சாட்சிகள் யாரும் சேர்க்கப்படாததும், காவல்துறையின் புள்ளிவிவர கணக்கிற்காக எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. இவ்வழக்கில் அசா.1 முதல் 3 சாட்சியங்களின் சாட்சியத்திலிருந்து சம்பவ தேதியான 01.12.2015 தேதியில் காவல் தடை சட்டம் அறிவிப்பு இருந்தது என்பது குறித்தும், சம்பவ சமயத்தில் பொது அமைதியை குலைக்கும் வகையிலும், பொதுமக்களுக்கு இடையூறு செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் எதிரி பேசிக்கொண்டிருந்தார் என நிரூபிக்க அருகில் இருந்த ஒரு தனிப்பட்ட சாட்சிகள் கூட விசாரிக்கப்படவில்லை. மேலும் சம்பவ இடம் பொதுமக்கள் நிறைந்த பகுதி என்று ஒப்புக்கொள்ளப்பட்ட நிலையில், ஒரு தனிநபர் கூட சாட்சியம் அளிக்கவில்லை என அசா.1 முதல் 3

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.03.24 15:27:30 +0000

சாட்சியளித்துள்ளது சந்தேகம் அளிக்கும் வகையில் உள்ளது. இந்நிலையில் எதிரிக்கு எதிராக காவலர்களின் சாட்சியம் மட்டுமே குற்றம்சாட்டப்பட்டவருக்கு தண்டனை பெற்றுத்தர போதுமான சாட்சியாக அமையவில்லை. ஆகவே அரசு தரப்பு வழக்கை போதிய சாட்சியத்தின் அடிப்படையில் அரசு நிரூபிக்க தவறிவிட்டமையால் சந்தேகத்தின் பலனை குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அளித்து குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்யலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

11. இவ்வழக்கில் அ.சா.1 முதல் 3 சாட்சியங்கள் படியாக 4 வது எதிரி மீது சட்டப்பிரிவுகள். 151 Cr.Pc r/w 7(1) (a) CLA Act ன் கீழான குற்றத்தினை அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

VII) இறுதியாக சந்தேகத்தின் பலனை 4 வது எதிரிக்கு அளித்து, 4 வது எதிரி மீது சட்டப்பிரிவுகள். 151 Cr.Pc r/w 7(1) (a) CLA Act ன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து, 4 வது எதிரியை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. (இவ்வழக்கின் 8 வது எதிரி கடந்த 24.03.2026 அன்று சிசி எண்.210/2026 என தனியாக பிரித்தெடுக்கப்பட்டுள்ளார்.)

12. இவ்வழக்கில் சான்றுப்பொருள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.03.24 15:27:35 +0000

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 24-ம் நாள் என்னால் இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI Date: 2026.03.24 15:27:40 +0000

நீதித்துறை நடுவர் எண்.I

தஞ்சாவூர்.

**<u>அரசு தரப்பு விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>**:

அ.சா.1 -- திரு. ஞானவேல் (சிறப்பு உதவி ஆய்வாளர்)

அ.சா.2 -- திரு. கஸ்துாரியப்பா (சிறப்பு உதவி ஆய்வாளர்)

அ.சா.3 -- திரு. ஜான் கென்னடி (சிறப்பு உதவி ஆய்வாளர்)

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**: இல்லை

**அரசு தரப்பு சான்றுப்பொருள்**:- இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI Date: 2026.03.24 15:27:46 +0000

நீதித்துறை நடுவர் எண்.I

தஞ்சாவூர்.

**<u>குறிப்பு:</u>**

1) வழக்கு விசாரணையின் போது எதிரி ஜாமீனில் இருந்தார்.

2) எந்த ஒரு சாட்சியையும் விசாரணைக்காக மூன்று வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கு முடிவு காவல்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.